DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 77/2021 |
| Deposition of witness | : | PW-5 |
| Name | : | குமார் |
| Father’s /Husband Name | : | காசிலிங்கம் |
| Village | : | மருதுவாஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 51 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day March, 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பத்தை பேரளம் போலிசாரிடம் மருதுவாஞ்சேரி ஆற்றங்கரை தெருவில் 06.09.2020 மதியம் 01.00 மணியளவில் போலிசாரிடம் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் சாட்சியாக எங்கள் தெருவை சேர்ந்த நபர் கையொப்பம் செய்தார். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

வழக்கு தொடர்பாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் இருந்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு பற்றி எழுதி இருந்து. நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தானா என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் சண்டை நடந்தது பற்றி எழுதியிருந்தது. சண்டை நடந்ததா எனக்கு தெரியுமா என்று எழுதியிருந்தது. என்னிடம் பேரளம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம். அதில் என்னை பார்ப்பதற்கு முன்பே போலிசார் எனது பெயரை அச்சடித்தார்களா என்றால்

இல்லை. போலிசார் எனது பெயர் விபரங்களை அச்சடித்து கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். எனது பெயர் விபரங்களை யார் கூறினார்கள் என்றால் தெரியவில்லை. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் கையொப்பம் செய்த நபர் பெயர் தெரியாது. நான் ஆற்றங்கரை தெருவில் வசிக்கிறேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.